**தலைப்பு 151 – கடற்தொழில் மற்றும் நீரக மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, கடற்தொழில் மற்றும் நீரக மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 151 – கடற்தொழில் மற்றும் நீரக மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 30 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கடற்தொழில் மற்றும் நீரக மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளது. இவை அவதானிக்கப்பட்டன.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செயற்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி செயற்பாடுகளும் திட்டமிடப்படல். (திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிதி மற்றும் திணைக் களத்தின் கட்டளைகளுக்கு இணங்க இணங்காமல் அல்லாமல் கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட உயர்தர நேர்மையுடன் நடைபெறல் வேண்டும்) | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2.1.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.3.1 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப் படாமை. | 2.10 |
| | | 4. உள்ளகக் கணக்காய்வில் காணப்பட்ட குறைபாடுகள் | 2.12 |

| | | | |
|---|---|---|---|
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமை ஒன்று தயாரித்து கொள்ளல். | 1. தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்<br>2. மனித வள முகாமைத் துவத்தில் பலவீனங்கள் | 2.6<br>2.13 |
| 127(2) | தனது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங் களில் அப்போதைக்கு இருக்கும் செலவு விடயங்கள் உட்பட புதிதாக அல்லது மிகையாக செலவிடுவதற் கான பிரேரணைகள் சிக்கனமாகவும் மற்றும் செயற்திறனாக அமைச்சில் கூர்மையான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | 1. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை<br>2. செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்<br>3. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்<br>4. பெறுகை செயற்பாடு களை செயற்படுத்துவதி லுள்ள குறைபாடுகள்<br>5. உள்ளகக் கணக்காய்வு | 2.1.2(ஆ)<br>2.2.1(ஊ)<br>2.1.2(இ)<br>2.3.2<br>2.12 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத் தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு விடப்படுகின்ற தெனவும் | 1. வாகனப் பாவணையின் குறைபாடுகள்.<br>2. சொத்துக்கள் குறை பயன்பாடு/ விளைவற்று காணப்படல். | 2.4(அ)<br>2.4(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்த ரினாலும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுகின்றன எனவும் மற்றும் தாம் அவற்றில் கையொப்ப மிடுவதற்கு முன்னர் அமைச்சினால் பரீட்சிக்கப் பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடுகள் தம்மால் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்படல். | 1. வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்க ப்படாமை<br>2. வருடாந்த பாதீட்டு எல்லையை விஞ்சி கட்டுப்பாடுகளுக்கு உட்படல்<br>3. கட்டுநிதிக் கணக்கு களில் குறைபாடுகள் | 2.1.3<br>2.5<br>2.9 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடு களில் நிதி ஏற்பாடு மற்றும் செலவினத்திற்கிடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 1. ஒதுக்கீடு செய்த ஏற்பாடுகளைப் பயன் படுத்தாமை<br>2. மிகை ஏற்பாடு செய்ய ப்பட்டிருந்தமை<br>3. குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் பெற்றுக்கொண்ட நிதி ஏற்பாடுகளை பயன் படுத்துவதில் குறைபாடுகள் | 2.7(அ)(i)<br>2.7(ஆ)(ii)<br>2.7(ஆ)(iii) |

| | | | |
|---|---|---|---|
| 127(6) | கணக்கீட்டு உத்தியோக த்தர்களின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடு களை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரச ஊழியர்களுக்காக முற்பணக் கணக்கில் காணப்பட்ட குறைபாடு கள் | 2.8 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்காமல் 2017 ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய 14 பிரதான செய்பணிகள் காணப்பட்டதுடன், அமைச்சின் கீழ் நிறுவி இருந்த 05 நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனம் 01 இன் மற்றும் வெளிநாட்டு செயற்திட்டம் 01 இன் மூலம் எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) எதிர்பார்த்த பிரதான கருமங்கள் நிறைவேற்றும் முறையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 128 கருமங்கள் இனங்கண்டிருந்த போதிலும் அவை பிரதான கருமங்களுடன் தொடர்பு ஒன்றினை ஏற்படுத்தக் கூடிய வகையில் தயாரித்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான நாளது வரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது கடமையாற்றும் பதவியணி தொடர்பான விபரங்கள் செயல் நடவடிக்கை திட்டத்துடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முக்கியத்துவத்தின் படி தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தின் செயற்பாடுகளில் இருந்து எதிர்பார்த்த வெளியீடுகள் மற்றும் விளைவுகளை மதிப்பீடு செய்து குறிப்பிட்டிருக்கவில்லை.

(உ) வருடாந்த செயற்பாடுகளுக்காக கட்டுநிதி தேவைத் திட்டம் (Imprest Requirement Plan) செயற்பாட்டுத் திட்டத்துடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

**2.1.2 செய்பணிகள் நிறைவேற்றாமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செய்பணிகளை நிறைவேற்றாமை**

---

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சினால் 128 செய்பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்ததுடன் அவற்றில் 126 செய்பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தது, நலன்பெறுவோருக்கு சூரிய உயிரணு வழங்குதல் மற்றும் இனவிருத்தி செய்யும் தொழிநுட்பம் ஆகிய 2 கருமங்களுக்காக உள்நாட்டு நிதியளிப்புகளின் மூலம் கூட்டுத்தொகை ரூபா 85.1 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையாளப்படாமை**

---

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 14 பிரதான செய்பணிகள் இனங்கண்டிருந்த போதிலும் செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள 128 செயற்பாடுகளில் 126 தொகைக்காக ரூபா 6,059.5 மில்லியன் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், கருமங்களில் செயலாற்றல் குறிகாட்டிகள் குறிப்பிடப்படாதிருந்தமையால் செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**(இ) செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்**

---

2017 நவம்பர் 30 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 15 செயற்திட்டங்களுக்காக 2017 ஆண்டிற்காக ரூபா 385.5 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 241.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்கள் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும், தாமதத்திற்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

---

2002 செப்தெம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ் அறிக்கை 2018 அக்தோபர் 10 திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**2.1.4 மீன் உற்பத்தி**

---

2017 ஆண்டின் போது மீன் உற்பத்தி 2016 ஆண்டிற்கு ஒப்பாக 07 சதவீதத்தினால் மற்றும் 2016 ஆண்டின் போது 2015 ஆண்டிற்கு ஒப்பாக 2.1 சதவீதத்தினாலும் முன்னேற்றமடைந்திருந்ததுடன் 2017 ஆண்டின் போது ஒட்டுமொத்த மீன் உற்பத்தி 1.65 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

**2.1.5** மீளாய்வாண்டு மற்றும் கடந்த பல வருடங்களில் மீன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான தரவுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | இறக்குமதி | | ஏற்றுமதி | |
|---|---|---|---|---|
| ஆண்டு | மெற்றிக் தொன் | செலவு | மெற்றிக் தொன் | செலவு |
| | | ரூபா.மில்லியன் | | ரூபா.மில்லியன் |
| 2014 | 78,712 | 18,860 | 26,320 | 34,797 |
| 2015 | 120,046 | 30,729 | 17,461 | 24,716 |
| 2016 | 115,693 | 35,172 | 17,593 | 26,802 |
| 2017 | **106,020** | **33,969** | **24,827** | **39,230** |
| | **420,471** | **118,730** | **86,201** | **125,545** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது மீன் உற்பத்தி ஏற்றுமதி வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 12,428 மில்லியனில் அதாவது 46 சதவீதத்தினால் அதிகரித்து இருந்ததுடன் இறக்குமதி செலவுகள் ரூபா 1,203 மில்லியனினால் அதாவது 3.42 சதவீதத்தினால் குறைந்திருந்தமையால் தேறிய வெளிநாட்டு செலாவணி உழைப்பு ரூபா 13,631 மில்லியனிற்கான நேர் பெறுமதியினை கொண்டிருந்தது.

(ஆ) அமைச்சினால் வழங்கப்படும் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏனைய அமைப்புக்களின் மூலமும் நன்னீர் மீன் குஞ்சுகளை இனப்பெருக்கம் செய்வதற்காக நேரடியாக செலவிடல் தொடர்பாக கவனம் செலுத்தாமல் மற்றும் செயலாற்றுகை இலக்கினை தீர்மானிக்காமல் 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை மீன் குஞ்சுகள் வைப்பு செய்வதற்காக ரூபா 123.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.2 செயற்படுத்தியிருந்த உள்நாட்டு வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சு உள்நாட்டு நிதியங்களை பயன்படுத்தி செயற்படுத்திய 04 செயற்திட்டங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 1,665 மில்லியனிற்கான ஏற்பாடுகளும், வெளிநாட்டுதவி செயற்திட்டம் 01 இற்காக ரூபா 439 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் முறையே ரூபா 1,180.8 தொகை மற்றும் ரூபா 6.39 மில்லியன் தொகை ஆக ரூபா 1,187.19 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 916.81 மில்லியன் தொகை அதாவது ஒதுக்கிய ஏற்பாடுகளில் 43 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.2.1 உள்நாட்டு நிதியச் செயற்திட்டங்களின் செயலாற்றுகை

(அ) கடற்தொழில் மற்றும் துறைமுக நங்கூரம் இடும் இடங்கள் இறங்கு துறைகளை அபிவிருத்தி மற்றும் மறுசீரமைத்தல் செயற்திட்டத்தின் கீழ் 14 செயற்திட்டங்களுக்காக 2016 முதல் 2017 வரை ரூபா 834.67 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாத 13 செயற்திட்டங்கள் மற்றும் தாமதமாக வேலை பூர்த்தி செய்யப்பட்ட 01 செயற்திட்டமும் காணப்பட்டது.

(ஆ) ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திற்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டு செயற்படுத்தியிருந்த 48 செயற்திட்டங்கள் போட்டி அடிப்படையில் கூறுவிலை அழைக்கப்படாமல் மதிப்பீட்டு பெறுமதிக்காக சமூக அடிப்படை சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) லுனுகம்வெஹெர நீர்தேக்கத்தில் 100 கடற்தொழில் வள்ளங்கள் நிறுத்தி வைப்பதற்காக ரூபா 706,499 தொகை செலவிடப்பட்டு கடற்தொழில் இறங்குதுறை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், இறங்கு துறையில் கடற்தொழில் வள்ளங்கள் நிறுத்தி வைக்க முடியாத நிலையில் உள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. போலியான அளவைகளின் அடிப்படையில் ரூபா 429,162 தொகை ஒப்பந்தக்காரரும் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) லுனுகம்வெஹெர பிரதேசத்தில் ரூபா 501,623 தொகை செலவிடப்பட்டு 2017 மார்ச் மாதத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மீன் விற்பனை நிலையம் 2017 ஆகஸ்ட் 04 திகதி அளவில் எதுவித தேவைக்கும் பயன்படுத்தியிருக்கவில்லை. மதிப்பீடு தயாரிப்பதில் குறைபாடுகள் மற்றும் ஏனைய காரணங்களினால் 7 பாதை அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக ரூபா 2,104,247 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(உ) உள்நாட்டு நிதியளிப்பு செயற்திட்டங்களில் அடங்கியுள்ள சில நிர்மாண வேலைகள் கைவிடப்படல்**

2015 ஆண்டு இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த கய்காவல நங்கூரத் தளங்கள் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக ரூபா 80.32 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கடலோர பாதுகாப்பு திணைக்களத்தில் இருந்து அங்கீகாரம் பெற்றிருக்காமையால் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. எனினும் செலுத்தியிருந்த பணத்தில் இருந்து ரூபா 50.96 மில்லியன் மாத்திரம் அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## 2.3 பெறுகை செயன்முறையின் மூலம் வழங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

### 2.3.1 பெறுகைகள் திட்டமிடல்

அமைச்சின் பெறுகை திட்டத்தினால் மீண்டுவரும் செலவுகளின் கீழ் உள்ள பெறுகைகள் உள்ளடங்கியிருக்கவில்லை.

### 2.3.2 பெறுகை செயன்முறை செயற்படுத்துதல்

(அ) கடற்தொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு கட்டிடத்தில் இரண்டாம் மாடி மறுசீரமைக்கும் அலுவல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குறைந்த விலை சமர்ப்பித்திருந்த ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தவேலை வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்திருந்த விலை மதிப்பீட்டுத் தொகையை விட 9.8 சதவீதம் கூடிய விலையாகக் காணப்பட்டது.

(ii) பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.1(இ), 4.3.1(அ) மற்றும் 8.9.1 பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(iii) ஆரம்ப மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள கருமங்களில் வித்தியாசங்களுக்காக பெறுகை குழுவின் மற்றும் மதிப்பாய்வுக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

(iv) ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றுகை பிணை முறி 2016 நவம்பர் 25 முதல் 2017 ஜூலை 31 திகதி வரை 4 சந்தர்ப்பங்களில் இடையிடையே நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஜூலை 31 திகதியின் பின்னர் காலநீடிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(v) ஒப்பந்த வேலையை நிறைவேற்றும் போது குறிப்பிட்ட நிறுவனத்தின் நிதி இயலுமையை போலவே பதவியணியினை ஈடுபடுத்தும் இயலுமை தொடர்பாகவும் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,493,240 தொகை பெறுமதியான அலுவலக உபகரணங்ள் பெறுகைக்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3.2(இ) மற்றும் 8.9.1(அ) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 இன் பிரகாரம் அமைச்சரவை பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய ரூபா 256,602,251 தொகை பெறுமதியான யாழ்ப்பாணம் காரைநகர் வள்ள செயற்தளத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தில் பெறுகை செயற்திட்ட ஆலோசனை கம்பனியினால் ஒரு பக்கேஜ் ரூபா 150 மில்லியன் மிகைக்காத வகையில் 3 பக்கேஜ்களின் கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அமைச்சின் பெறுகை குழுவின் மூலம் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

**(அ) வாகனப் பாவணை**

**எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யாமை**

2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இன் பிரகாரம் அமைச்சுக்கு சொந்தமான 40 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்திருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

உடவலவ மஹஆர கடற்தொழில் சனசமூக நிலையக் கட்டிடம் மற்றும் மேற்கு குடாவெல்ல நாகுலுகமுவ கடற்தொழில் கூட்டுறவு கட்டிடம் முறையே ரூபா 1.5 மில்லியன் தொகை மற்றும் ரூபா 12 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 செப்தெம்பர் அளவிலும் பயன்படுத்தியிருக்கவில்லை.

**(இ) வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 திகதிய 05/2016 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை சுற்றறிக்கையின் 3.1.6 பந்தியின் பிரகாரம் 2018 மார்ச் 17 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட

வேண்டுமெனினும், அமைச்சினால் அவ் அறிக்கை 2018 ஆகஸ்ட் 01 திகதி அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2016 வருடாந்த பண்டக் கணிப்பீட்டு சபை அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மேற்கொள்ளப்பட்ட ஏனைய விதப்புரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) இராஜாங்க அமைச்சு அலுவலகத்தின், உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தில் மற்றும் செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் பண்ட கணிப்பீடு மேற்கொண்டிருக்கவில்லை.

**(ஈ) வெளிசாராருக்கு கொடுத்திருந்த சொத்துக்கள்**

அமைச்சினால் ரூபா 38.5 தொகைக்கான உத்தியோகபூர்வ வாகனங்கள் விவசாய அமைச்சுக்கு எடுத்து சென்றிருந்த போதிலும், 2018 அக்தோபர் 30 திகதி வரை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.5 ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள்

**வருடாந்த பாதீட்டு எல்லையை மிகைத்து ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்**

2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 ஆம் அண்டு அரச கணக்கு சுற்றறிக்கையின் பந்தி 02(அ) இற்கு இணக்கமின்றி 16 செலவு விடயங்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 88.26 மில்லியன் ஏற்பாடுகளை ரூபா 3.72 மில்லியனினால் மிகைத்து ரூபா 5.97 மில்லியனிற்கான ஈடுபாட்டுப் பொறுப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது.

## 2.6 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வு பந்திகள்

அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் அடங்கியிருந்த கணக்காய்வு பந்திகளின் மூலம் சுட்டிக் காட்டிய பற்றாக்குறைகள் தொடர்பாக அமைச்சினால் சரிசெய்திருக்காத பந்திகள் தொடர்பாக கீழே காணப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி | |
| 2015 | 3.10.3(அ) | 2017 ஆண்டின் போது 02 தாய் வள்ளங்கள் கொள்வனவு செய்வதற்காக சிங்கப்பூர் கம்பனி ஒன்றுடன் அணுகியிருந்த உடன்படிக்கை ஒன்றின் பிரகாரம் ஒப்பந்தக்காரர் வள்ளத்தை உற்பத்தி செய்து ஒப்படைத்திருக்காததுடன் வங்கி பிணை முறி இன்றி முற்பணம் ஒன்றாக ரூபா 65 மில்லியன் உட்பட ரூபா 71.59 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது, |

| | | |
|---|---|---|
| 2016 | 3.11(ஔ)xi | இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் வழங்கியிருந்த பணத்தினால் அளவை சிட்டைகள் அடிப்படையாகக் கொண்டு நீர்கொழும்பு கடல்ஏரி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2014 திசெம்பர் 14 ஆம் திகதி ரூபா 5 மில்லியன் செலுத்தியிருந்த போதிலும் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. |
| 2016 | 3.13(ஆ) | இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்தை மீள் கட்டமைப்பதற்காக 2016 ஆண்டின் போது குறைநிரப்பு ஏற்பாடுகள் என திறைசேரியால் ரூபா 890.19 மில்லியன் தொகை மற்றும் நிதிப்பிரமாணம் 66 மாற்றங்களின் கீழ் ரூபா 3.10 மில்லியன் தொகையாக ரூபா 893.29 மில்லியன் தொகை அமைச்சுக்கு வழங்கியிருந்த போதிலும் அதன் முன்னேற்றத்தை அறிவித்திருக்கவில்லை. |

**2.7 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | % |
| 2013 | மூலதன | 1,459.93 | 1,252.96 | 206.97 | 14.18 |
| 2014 | மூலதன | 2,009.26 | 1,309.31 | 699.95 | 34.84 |
| 2015 | மூலதன | 2,680.00 | 1,951.29 | 728.71 | 27.19 |
| 2016 | மூலதன | 3,021.83 | 2,942.76 | 79.07 | 2.62 |
| 2017 | மூலதன | 5,627.72 | 3,321.35 | 2,307.4 | 40.99 |

மேற்கூறிய தகவல்களின் பிரகாரம் கடந்த 05 ஆண்டுகளின் போது 2016 தவிர ஏனைய அனைத்து ஆண்டுகளிலும் ஒதுக்கியிருந்த மூலதன ஏற்பாடுகளில் கணிசமான அளவு பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அங்கு கூடிய அளவு ஏற்பாடுகள் சேமிப்பு ஒன்று 2017 ஆண்டின் போது அவதானிக்கப்பட்டது.
பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செய்பணிகள் நிறைவேற்றுவதற்காக உத்தேசித்த கால சட்டகம் பற்றி கவனம் செலுத்தாமல் ஏற்பாடுகள் மேற்கொள்ளல்**

அமைச்சினால் புதிய கடற்தொழில் மற்றும் நீர் உயிரின கொள்கையொன்று தயாரித்தல் மற்றும் வட மாகாண நிலைபேறான கடற்தொழில் அபிவிருத்தி செயற்திட்டமொன்று செயற்படுத்துதல் ஆகிய கருமங்களை நிறைவேற்றுவதற்காக

மொத்த கிரய மதிப்பீட்டின் பிரகாரம் தேவையான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதி அளவில் வெளிநாட்டு கல்வி நிகழ்ச்சித் திட்டம் உரிய முறையில் திட்டமிடப்படாமையால் ஆண்டின் மத்திய பகுதியில் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படல் ஆகிய காரணங்களினால் ரூபா 270 மில்லியன் தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

04 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 207.45 மில்லியன்களுக்காக மொத்த தேறிய ஏற்பாடுகளில் ஏதும் பயன்படுத்தப்படாமல் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை ஏற்பாடுகள் ஒதுக்கியிருத்தல்**

07 செலவு விடயங்களுக்காக மொத்தம் ரூபா 101.6 மில்லியன் மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த செலவு விடயம் தொடர்பாக ஏற்பாடுகளில் கூட்டுத்தொகை ரூபா 59.98 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தியிருந்தமையினால் சேமிப்பு, ஒதுக்கியிருந்த தேறிய ஏற்பாடுகளில் 18 சதவீதம் முதல் 72 சதவீதம் வரையான வீச்சு அளவினை கொண்டிருந்தது.

**(iii) குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகளின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளல்**

குறைநிரப்பு உதவிச்சேவை மற்றும் அவசர தேவை செயற்திட்டத்தின் மூலம் விண்ணப்பித்த கருமங்களுக்காக ஏற்பாடுகள் பயன்படுத்தாமல் வேறு செலவு விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 வீரமொங் நடைமுறையினை பயன்படுத்தி ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தது.

**2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 151001 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 9.5 | 9.4 | 5 | 5.3 | 30 | 25 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர ரூபா 1,116,448 தொகை ஆகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதி 4 வருடங்கள் முதல் 32 வருடங்கள் வரையான காலவீச்சு முதல் காணப்பட்ட போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக அல்லது தீர்ப்பதற்கு அமைச்சுக்கு இயலாதிருந்தது.

**(ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

2004 அக்தோபர் 11 திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.7 இன் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்று வந்த 02 மாதங்கள் கடந்த பின்னர் அல்லது உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் சென்று 3 மாதங்கள் கடந்த பின்னர் திணைக்களங்கள் இடையே தீர்க்கப்படாத கடன்மீதி இருக்க முடியாது என குறிப்பிட்டிருந்த போதிலும் 1987 முதல் 1994 வரையான காலப் பகுதி முதல் காணப்படும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 14 உத்தியோகத்தர்களிடையே அறவிடப்பட வேண்டிய ரூபா 153,526 இற்கான கடன் மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.9 கட்டுநிதிக் கணக்கு

2015 ஜூலை 14 ஆம் திகதிய 03/2015 இலக்கங் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் விடயம் பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றிருந்த நிமித்த கட்டு நிதியை தீர்க்க வேண்டுமெனினும், 06 சந்தர்ப்பங்கள் தொடர்பாக வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 9,714,599 தொகையான நிமித்த கட்டுநிதி 2018 மே 09 ஆம் திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை.

## 2.10 பதிவேடு மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன், சில பதிவேடுகள் முறைப் பிரகாரம் மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| கணினிகள் துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 திகதி ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளது வரை ஆக்கப்பட் டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| மின்சார உபகரணப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| அடியிதழ் புத்தகப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 341 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| மதிப்பாய்வுக் குழுக் களின் தின வரவுப் பதிவேடுகள் | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.9.2 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| விலைமனு அழைப்பு பதிவேடு | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.2.1 | பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.11 இணக்கமின்மை

### 2.11.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2012 ஆகஸ்ட் 07 திகதிய 02/2012 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | ஒப்பந்தவேலைகள் வழங்கும் போது மற்றும் செயற்படுத்தும் போது அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப மதிப்பீட்டின் நோக்கெல்லை மாற்றப்படல், தேவை விலைமுரண்கள் ஆகிய அனைத்து விடயங்களையும் கவனத்தில் எடுத்து மொத்த கிரய மதிப்பீடு ஒன்று தயாரித்திருக்கவில்லை. |
| (ஆ) ஜனாதிபதி செயலாளரின் கடிதம் | |
| 2010 மே 14 திகதிய சீஏ/1/17/1 இலக்க கொண்ட ஜனாதிபதி செயலாளரின் கடிதம் | அமைச்சர் ஒருவருக்கு அல்லது பிரதி அமைச்சர் ஒருவருக்கு மற்றும் அவரது பதவியணிக்கு 03 வாகனங்கள் மிகையாக ஒதுக்கப்பட்டிருந்தது. |

## 2.12 உள்ளகக் கணக்காய்வு

கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் தமது திணைக்களங்களின் நிதிப் பிரமாணம் 128 இல் குறிப்பிட்டுள்ள தமது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் நிறைவேற்றுவதற்காக தமது

திணைக்களங்களில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவிக் கொள்ள வேண்டுமென நிதிப்பிரமாணம் 133 இன் மூலம் சுட்டிக்காட்டியிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வு அலகிற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 8 பேர் காணப்பட்டதுடன் அவற்றில் 02 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. 2009 ஜூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009/01 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவினை வலுப்படுத்துவதற்கு கணக்குகள் மற்றும் கணக்காய்வு தொடர்பான அறிவு மற்றும் பயிற்சி என்பன காணப்படும் போதிய எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 09 ஆம் திகதி டீஎம்ஏ/ஏஎம்சீ/2016/05/05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அபிவிருத்தி விடயங்களில் விஷேட கவனம் செலுத்த வேண்டியிருந்த போதிலும், 2017 ஆண்டிற்கான அமைச்சினால் கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைக்களுக்காக ரூபா 52.15 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) அமைச்சின் கீழ் நிறுவப்பட்டிருந்த நியதிச் சட்ட முறையான நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 28 உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்களுக்காக 2018 ஜூலை 25 திகதி வரை பதில் அனுப்பியிருக்கவில்லை.

## 2.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

அமைச்சின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணிகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளுக்குரிய வேதன செலவினத் தொகுதிக்காக ரூபா 104.88 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 0.66 மில்லியன் தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 22 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 5 | 5 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 116 | 83 | 33 |
| (iv) | ஆரம்ப நிலை | 58 | 47 | 11 |
| | | 201 | 157 | 44 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 பெப்ரவரி 23 திகதிய 16/0280/702/002/111 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தொழிற் சங்க விடயங்களின் கூட்டிணைப்பு விடயங்களுக்காக அமைச்சின் உதவிச் செயலாளர் (தொழிலாளர் தொடர்பு) ஆக இலங்கை நிருவாக சேவை அல்லாத, தற்காலிக பதவியொன்றினை ஏற்படுத்தி அப் பதவிக்காக பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இல் SL-1-2006 சம்பள அளவு கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அப் பதவிக்காக இருக்க வேண்டிய குறைந்த தகைமை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் அமைச்சின் அலுவலகத்திற்கு இணைத்திருந்த போதிலும் அமைச்சரின் பதவியணியின் அவ்வாறான பதவி ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.14 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் நெருங்கியிருக்காமை**

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2030 ஆண்டளவில் தனது அமைப்பினை சேர்ந்த அனைத்து நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு வழங்களை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் அறிமுகப்படுத்தியிருந்த போதிலும், அதற்கு பொருத்தமான விதத்தில் எதிர்பார்த்த குறிக்கோள், இலக்குகள் மற்றும் சுட்டிகள் இணங்கண்டிருக்காத சரியான தரவுகள் பெற்றுக்கொள்ளல் மற்றும் பௌதீக வள முகாமைத்துவம் செய்யும் நடைமுறைகளும் இனங்கண்டிருக்கவில்லை.